## *5*

# விசுவாசத்தின் தெரிவு [1:16–18]

*ஜெர்மனி நாட்டு மக்களுக்கு 1983ம் ஆண்டு ஒரு வினோதமான ஆண்டாக இருந்திருக்க வேண்டும். அந்த ஆண்டின்போது, இரண்டு மனிதர்கள் வாழ்வு பற்றிய முற்றிலும் மாறுபட்ட இரு தத்துவங்களைக் கொண்டிருந்தபோதும், அவர்களின் பிறந்தநாட்கள் அங்கு கொண்டாடப்பட்டன. அந்த ஆண்டு, மார்ட்டின் லுத்தர் பிறப்பின் ஐந்நூறாவது ஆண்டுவிழாவையும் கார்ல் மார்க்ஸ் பிறப்பின் நூறாவது ஆண்டுவிழாவையும் குறித்தது. மார்க்ஸ் என்பவர் பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையாக இருக்கிறார். அதன் முன்னேற்றமானது, பல மக்களின் மனித ஆவி (மற்றும் பெரும்பாலும் உடல்) என்பவற்றைச் சிறையிடுதலுக்கு வழிநடத்திற்று. லுத்தர் என்பவர் சீர்திருத்த இயக்கத்தின் தலைவராக இருந்து, மக்களை மத்தியகாலக் கத்தோலிக்கத்தில் இருந்து மதரீதியான சுதந்தரத்திற்கு வழிநடத்தினார்.*

*நமது உலகத்தில், மாறுபட்ட இரு கருத்துக்கள் இயக்கத்தில் இருப்பதை நாம் தெளிவாகக் காணுகிறோம். அந்தகாரப் பிரபுவின் அதிகாரமானது மக்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திற்குள் காட்டுத்தனமாக மயக்குகிறது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம், அவரது இரத்தத்தின் மூலமாக மனிதர்களை விடுதலையாக்குகிறது. ஒன்று மனிதனின் வீழ்ச்சிக்காகச் செயல்படுகிறது, அதே வேளையில் இன்னொன்று மனிதனை இரட்சிப்பதற்காகச் செயல்படுகிறது.*

*போட்டியிடும் இந்த வாழ்வு நடைகள் இரண்டில் ஒன்றை முடிவு செய்யும் செயலை நாம் எதிர்கொள்வோம் என்று யாக்கோபு அறிந்திருக்கிறார். ஏவுதலினால் அவர், எது மிகச்சிறப்பானது என்று அறிந்திருக்கிறார். அவர் சரியான முடிவை நம் மனதில் ஆழப்பதிய வைக்க முயற்சி செய்கிறார். அவர் நாம் விசுவாசத்தின் சரியான தேர்வை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.*

## வஞ்சனையை எதிர்த்து நிற்கும் தெரிவு (1:16)

*யாக்கோபு, வஞ்சிக்கப்படாதபடிக்கு நம்மை எச்சரிப்பதன் மூலம், முடிவெடுத்தலில் நமக்கு உதவுகிறார் (1:16). உடனடியாக நாம், "எதைக் குறித்து வஞ்சிக்கப்படுதல்?" என்று கேட்கிறோம். முந்திய வசனங்களில் இருந்து இரண்டு விஷயங்கள் பட்டியலிடப்பட முடியும்: புறம்பான சோதனைகளின் நோக்கங்கள் (1:2-4) மற்றும் உள்ளாகச் சோதிக்கப்படுதலின் ஆதாரமூலம் (1:13-15). ஆனால், யாக்கோபு தாம் கூறவிருப்பதை முன்னதாகச் சுட்டிக்காண்பிக்கிறார் என்பது காணப்பட முடியும். வஞ்சிக்கப்படுதல் பற்றிய இந்த எச்சரிக்கை, ஒரு குறிப்பிட்ட கருத்திற்கு முகவுரையாக வேதவசனத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 6:9, 10; கலாத்தியர் 6:7, 8).*

*வஞ்சிக்கப்படுதல் பற்றி எச்சரிக்கப்பட்டுள்ள "பிரியமான சகோதரர்" என்பது இந்த வசனத்தில் புரிந்துணரப்பட வேண்டிய குறிப்பான கருத்துக்களில் ஒன்றாக உள்ளது. வேறு எவரைக் காட்டிலும் அதிகமாக ஒரு விசுவாசியை*

வஞ்சிப்பதற்குச் சாத்தான் மிகவும் கடினமாக செயல்படுவான். கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்படக் கூடும்படிக்கு தவறான முடிவுகளை - மேற்கொள்ளக் கூடும்.

## தேவனுடைய நற்தன்மையைப் புரிந்துணருதலுக்கான தெரிவு (1:17)

சோதிக்கப்படுதலுக்கு உட்படுதல், சாத்தானைப் பின்பற்றுதல் ஆகியவை நமக்கு நன்மையான சிலவிஷயங்களாகத் திரும்பும் என்று நம்புதலுக்குள் நாம் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (1:17) என்ற காரணத்தினால் நாம் இதை அறிய முடியும். இது யாக்கோபின் முந்திய கருத்தை வலியுறுத்துகிறது என்பதையும் நாம் உணர்ந்தறிய வேண்டியதாக உள்ளது. தேவன் நன்மையான விஷயங்களை மாத்திரமே கொடுக்கிறார் என்பதால், 13ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அழிவுக்கேதுவான சோதிக்கப்படுதலை அவர் தர இயலாது. தேவன் கொடுக்கிற விஷயங்கள் இரக்கம் மற்றும் உதவிநிறைந்த தன்மை ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதர் பெரும்பாலும், தாம் செய்ய முடிபவற்றால் நிறைந்தவர்களாகி, தேவனை வாழ்க்கையில் இருந்து வெளியே விட்டு விட முயற்சி செய்கின்றனர். டெக்ஸாஸ் மாகாணத்தின் டைலர் என்ற இடத்தில் உள்ள ரோஜாத் தோட்டங்கள், டெக்ஸாஸ் மலை நாட்டின்; நீலவண்ணக் குல்லாய்கள், மலர்கள், ஆக்லஹாமா மாகாணத்திலுள்ள மஸ்கோஜீ நகரின் அசாலீக்கள் அல்லது ஓசார்க் மலைகளில் உள்ள பசுங்காடுகள் ஆகியவற்றைக் காண்பதற்குப் பலமைல்கள் கார் ஓட்டிச்செல்வார். ஆனால் தேவனின்றி ஒரு மலரோ, மலர்க்கொத்தோ அல்லது இலையோ இராது என்பதை அவர் [மனிதர்] புரிந்துணருவதாகக் காணப்படுவ தில்லை.

சிலர் இவ்வசனத்தை, "நன்மையான" ஈவுகளுக்கும் "பூரணமான" வரங்களுக்கும் இடையில் வித்தியாசப்படுத்துவதன் மூலம் இந்த வசனத்தை நீட்டியுரைப்பார்கள். எல்லா மக்களும் பகிர்ந்து கொள்ளக்கூடிய (உணவு, காற்று, தண்ணீர், முதலிய) ஈவுகள் "நன்மையான ஈவுகளாக" உள்ளன, மற்றும் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்குத் தரப்படுகிற ஆசீர்வாதங்கள் "பூரணமான" வரங்களாக உள்ளன என்பதாகக் காண்பார்கள். தேவன் தருகிற "வரங்களைப்" பற்றிய இந்த வித்தியாசப்படுத்துதல் உண்மையாக இருக்கலாம் என்று இருக்கையில், இது இங்கு யாக்கோபு ஏற்படுத்தும் கருத்துக்கு அப்பால் செல்லுவதாக உள்ளது. தேவனுடைய இயல்பானது அவரைச் சோதித்தலில் ஈடுபடுவதில் இருந்து தடைசெய்கிறது என்பதை நாம் காணவேண்டும் என்று யாக்கோபு விரும்புகிறார் (1:13, 17). மேலும், தேவன் ஒருவர் மாத்திரமே நன்மையான ஈவுகளையும் பூரணமான வரங்களையும் கொடுப்பவராக இருக்கிறார் (1:17). அவர் நமக்கு ஒரு வீழ்ச்சியை ஏற்பாடு செய்து, ஒருநாள் நம்மை ஆசீர்வதித்து மற்றும் அடுத்த நாளில் நம்மைச் சோதிக்க விரும்புகிறவர் அல்ல, அவரிடத்தில் "யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (1:17; NIV) ஆனால் அவர் நமக்கு நன்மையான மற்றும் பூரணமான வரங்களைத்

தொடர்ந்து அளிக்கிறார். நாம் தேவனைத் தெரிவு செய்துகொள்ளும்போது, நாம் மிகச்சிறந்தவரைத் தெரிவுசெய்திருக் கிறோம் என்பது நமது சிந்தைகளில் பதிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

## தேவனுடைய கிருபையை நினைவுகூருவதற்கான தெரிவு (1:18)

மேற்சொல்லப்பட்ட கருத்தை மறுவலிவூட்டுவதற்கு, தேவன் நமக்கு ஏற்கனவே செய்துள்ளவற்றை யாக்கோபு கூறுகிறார். தேவன் தங்களுக்குச் செய்துள்ளவற்றை மக்கள் நினைவுகூரும் போது, விசுவாச ஓட்டத்தைத் தெரிவு செய்வதற்கான அவர்களின் முடிவு சுலபமாக மேற்கொள்ளப்படும் என்பதே அவரது [யாக்கோபின்] வாதமாக இருக்க வேண்டும்.

கீழ்ப்படிதல் உள்ள விசுவாசிக்குத் தேவன் மேற்கொண்டுள்ள மூன்று செயல் களை யாக்கோபு பட்டியலிடுகிறார் (1:18).

முதலாவது, "அவர் தேர்ந்து கொள்கிறார்" - KJV வேதாகமமானது, "அவர் தமது சொந்த சித்தங்கொண்டு" என்று கூறுமிடத்தில் சற்று அதிகமாக விளக்கமளிப்பதாக உள்ளது. தேவன் தமது சித்தத்தில் [நம்மை] வைத்திருந்து, எல்லாம் தயாரானபோது, மனிதனை இரட்சிக்கும் செயல்முறையைத் தொடங்கினார் (கலாத்தியர் 4:4, 5). எல்லா மனிதர்களுக்கும் இரட்சிப்பை அளித்தல் என்பது, எப்போதுமே தேவனுடைய விருப்ப நோக்கமாக இருந்துள்ளது (எபேசியர் 1:4, 5; 1 யோவான் 2:2; மத்தேயு 11:28). தேவன் சித்தம் கொண்டு இரட்சிப்பை அளித்தார் என்பதைத் தவிர, மனிதரை இரட்சிப்பதற்கு, வற்புறுத்தும் எந்தக் காரணத்தையும் அவர் கொண்டிருக்கவில்லை.

இரண்டாவது, அவர் "நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்." யாக்கோபு இவ்விடத்தில் "புதிய பிறப்பு" பற்றிப் பேசுகிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை (யோவான் 3:5; தீத்து 3:5). இந்த வேளையில்தான், பாவத்தினால் சபிக்கப்பட்ட பழைய மனிதன், இயேசுவின் மரணத்திற்குள் அடக்கம் பண்ணப்பட்டு, ஒரு புதிய மனிதனாக (ரோமர் 6:4) உயிர்ப்பிக்கப் (ஜநிப்பிக்கப்) படுகிறான். "சத்தியம் வசனம்" என்பதே, நம்மை இந்தப் புதியபிறப்பை நோக்கி நகர்த்துகிறது, அதைப் பற்றி நமக்குப் போதிக்கிறது. வில்லியம் பார்க்ளே என்பவர், "சுவிசேஷம்தான் இந்த 'சத்திய வசனமாக' உள்ளது; ..." என்று மிகவும் எளிமையாகக் கூறினார்.[1] இந்தக் கூற்றானது, வேதவசனம் நமக்குக் கூறுவதுடன் ஒத்துப் போகிறது (ரோமர் 1:16; யாக்கோபு 1:21; 1 பேதுரு 1:23).

மூன்றாவது, "தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு" அவரே இவை எல்லாவற்றையும் செய்தார். முதல் இரண்டு சொற்றொடர்கள் இந்த மூன்றாவது சொற்றொடரைச் சுட்டிக்காண்பிக்கின்றன. கிறிஸ்தவர், தேவன் படைத்த யாவற்றிலும் "முதற்பலன்" வகையாக இருக்கிறார். "முதற் பலன்கள்" என்பவை பஸ்கா பண்டிகையின்போது காணிக்கையாக அளிக்கப்பட்டன (லேவியராகமம் 23:10; உபாகமம் 26:2), ஏனெனில் அவைகள் மிகவும் சிறந்தவைகளாக இருந்தன. பழைய ஏற்பாட்டின் இந்தக் கருத்தானது புதிய ஏற்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது, மற்றும் இந்தச் சொல்விளக்கம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது

*(1 கொரிந்தியர் 15:20; 16:15; வெளிப்படுத்தின விசேஷம் 14:4). யாக்கோபு நிருபத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளபடியாக இந்தச் சொல்விளக்கமானது, ஒரு இரட்டை அர்த்தத்தைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது. முதலாவது இது, கிறிஸ்தவர் தேவன் படைத்த படைப்புகள் யாவற்றிலும் மிகவும் சிறந்தவராக இருக்கின்றார் என்பதாகும். இரண்டாவது, இது இன்னும் அதிகமான பலன்கள் தொடரும் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.*

## முடிவுரை

*பிசாசானவனின் சோதிக்கப்படுதல்களினால் நாம் எதிர்கொள்ளப் படும்போது, தேவன் நமக்கு ஏற்கனவே செய்துள்ளவற்றை நாம் நினைவு கூருவோமாக. நாம் அவரது படைப்புகளில் முதன்மையானவர்களாக இருக்கும்படிக்கு "மறுபடி பிறந்தவர்களாக" இருப்பதற்காக, அவரால் நாம் "தெரிந்துகொள்ளப்பட்டோம்."*

---

குறிப்பு

[1]William Barclay, *The Letters of James and Peter* (Philadelphia, Pa.: Westminster Press, 1960), 63.